# க.பொ.த சாதாரண தரம் - 2020

## முதலாந் தவணை

## செயலட்டை

## அலகு 05. விரதங்கள்

01. அ. விரதம் என்பதற்கு ஆறுமுக நாவலர் வழங்கும் வரைவிலக்கணம் யாது?
    ஆ. விரதம் எதன் பொருட்டு நோற்கப்படுகின்றது?
    இ. விரதம் அனுட்டிப்பதால் ஏற்படும் அனுகூலம் யாது?

02. அ. சிவனுக்குரிய நட்சத்திரமாகக் கொள்ளப்படும் நட்சத்திரம் எது?
    ஆ. திருவெம்பாவை விரதம் அனுட்டிக்கப்படும் காலம் யாது?
    இ. திருவெம்பாவை விரத நடைமுறைகளை சுருக்கமாகக் கூறுக.
    ஈ. ஆருத்திரா தரிசனத்தின் சிறப்புக்களைக் கூறுக.

03. அ. வரலட்சுமி விரதம் யாரை வேண்டி அனுட்டிக்கப்படுகின்றது?
    ஆ. வரலட்சுமி விரதம் அனுட்டிக்கப்படும் காலம் யாது?
    இ. இவ் விரதத்தை பெரும்பாலும் யார் அனுட்டிப்பர்?
    ஈ. வரலட்சுமி விரத நடைமுறைகளை கூறுக.
    உ. அஷ்டலட்சுமிகளும் யார்?

04. அ. கார்த்திகை விரதம் எந்தக் கடவுளுக்குரியது?
    ஆ. கார்த்திகை விரதம் எப்போது அனுட்டிக்கப்படும்?
    இ. கார்த்திகை விரதம் எதனை நினைவூட்டும் விதமாக அமைகின்றது?
    ஈ. கார்த்திகை விளக்கீடு வேறு எப்பெயரால் அழைக்கப்படும்?
    உ. கார்த்திகை விளக்கீட்டுடன் தொடர்புடைய புராணக் கதை எது?
    ஊ. சொக்கப்பனை என்றால் என்ன?
    எ. பஞ்சபூதத் தலங்களுள் அக்கினித் தலமாக விளங்குவது?
    ஏ. எந்த நட்சத்திரத்தன்று விஷ்ணுவாலய தீபம் நிகழ்கின்றது?

**விடைகள்.**

01. அ. மனம் பொறி வழி போகாது நிற்றற்பொருட்டு, உணவை விடுத்தேனும் சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றினாலும் கடவுளை விதிப்படி மெய்யன்போடு வழிபடுதல்.

ஆ. ஆன்ம ஈடேற்றம் கருதி

இ. மனம் வாக்கு முதலிய தூய்மை அடையும், ஞானம் - நல்லறிவு கைகூடும்

02. அ. திருவாதிரை

ஆ. ஆண்டுதோறும் மார்கழி மாதம் வளர்பிறை சஷ்டி (ஆறாம் நாள்) திதியில் ஆரம்பமாகி திருவாதிரை நட்சத்திரத்தோடு கூடிய முழுமதித் தினத்தன்று (பூரணை தினம்) நிறைவடையும்

இ. அதிகாலையில் எழுந்து நீராடி, வீதி வழியாக அடியார்கள் வீடுதோறும் சென்று அவர்களையும் அழைத்தவாறு திருவெம்பாவைப் பாடல்களைப் பாடியபடி கோயிலுக்குச் சென்று, வழிபாடு செய்வர். திருவெம்பாவைக் காலம் முழுவதும் மாணிக்கவாசகரின் திருவெம்பாவைப் பாடல்களையே பாடுவர். பத்து நாட்களும் விரதம் இருப்பர். இறுதித் தினமான திருவாதிரையன்று சிவன் கோயில்களில் நடராஜப் பெருமான் தேரில் எழுந்தருளி அருள்பாலிப்பார். அன்றைய தினம் அடியார்கள் உபவாசமிருந்து இறைவனை மனம், மெய்களால் வழிபடுவர். மறுநாள் அன்னதானம் வழங்கி பாரணை செய்வர்.

ஈ. திருவாதிரையன்று நடேசர் அபிஷேகம் இடம்பெறும். அதனை ஆருத்திரா தரிசனம் என்பர். சிதம்பரத்தில் நடைபெறும் ஆருத்திரா தரிசனம் மிகவும் சிறப்பானது. ஈழத்துச் சிதம்பரம் எனப் போற்றப்படும் காரைநகர் சிவன்கோயிலிலும் அன்றைய தினம் நடராஜப் பெருமானுக்குப் பெருவிழா இடம்பெறும்.

03. அ. மஹாலட்சுமி

ஆ. ஆவணி மாத பௌர்ணமிக்கு முந்தைய வெள்ளிக்கிழமை அனுட்டிக்கப்படும்

இ. திருமணமான சுமங்கலிப் பெண்கள்

ஈ. பெண்கள் தமது திருமணத்திற்கு அடுத்துவரும் வரலட்சுமி பூசையிலிருந்து இவ் விரதத்தைக் கடைப்பிடிக்கத் தொடங்குவர். செல்வங்கள் அனைத்தையும் அருளும் வரலட்சுமியை கலசத்தில் - கும்பத்தில் ஆவாகனம் செய்து வழிபடுவர். அவரவர் சக்திக்கேற்ப அலங்கார ஆராதனைகளுடன் அம்மனை அழைத்துப் வரவேற்புப் பூசை செய்வர். ஒன்பது முடிச்சுக்கள் போட்ட மஞ்சள் நூலை பூசையில் வைத்து தமது வலது கையில் அணிந்துகொள்வர். அந்த ஒன்பது முடிச்சுக்களும் அட்டலட்சுமிகளையும், வரலட்சுமியையும் குறிக்கும்.

விரதம் அனுட்டிப்போர் முதல்நாள் ஒருநேர உணவுண்டு, விரத நாளன்று உபவாசமிருந்து, மாலைநேரம் பூசைவழிபாடுகள் செய்து பூசையில் வைத்த நோன்புக் கயிறை அணிந்து கொள்வர். நைவேத்தியத்தை பிரசாதமாக ஏற்று விரதத்தை நிறைவுசெய்வர்.

உ. ஆதி லட்சுமி, தனலட்சுமி, தானிய லட்சுமி, வித்யா லட்சுமி, வீர லட்சுமி, கஜ லட்சுமி, சந்தான லட்சுமி, விஜய லட்சுமி

04. அ. முருகக் கடவுளுக்குரியது

ஆ. கார்த்திகை மாதத்து கார்த்திகை நட்சத்திரத்தன்று

இ. சரவணப் பொய்கையில் கார்த்திகைப் பெண்களால் முருகப் பெருமான் வளர்க்கப்பட்டமையை

ஈ. திருக்கார்த்திகை, கார்த்திகை தீபம்

உ. பிரம்மாவும் விஷ்ணுவும் அடிமுடி தேடிய கதை

ஊ. விளக்கீட்டின் போது ஆலயங்களில் கமுகு, போன்ற உயர்ந்த மரங்களை நாட்டி, உலர்ந்த தென்னோலை, கமுகோலை, பனையோலை, வரமைச்சருகு போன்றவற்றை நிறைவாகக் கட்டி, பெரியதொரு தீபமாக எரியவைப்பர். இதனை சொக்கப்பனை அல்லது சொக்கப்பானை கொழுத்துதல் என்பர். பிரம்மாவிற்கும், விஷ்ணுவிற்கும் இடையில் சோதிப்பிழம்பாக தோன்றிய இறைவனைக் குறிப்பதற்காகவே சொக்கப்பனை எரிப்பர்.

எ. திருவண்ணாமலை

ஏ. ரோகிணி நட்சத்திரத்தன்று